சாகித்திய அகாதமி மற்றும் தியாகராசர் கல்லூரி தமிழ்த்துறை இணைந்து நடத்திய

# வள்ளலார் 200 கருத்தரங்கத்தின் தொடக்க விழா



மதுரை தெப்பக்குளம் தியாகராசர் கல்லூரியில் கல்லூரிச் செயலர் கரு முத்து க.தியாகராசன் தொடங்கி வைத்து, கருத்த ரங்க ஆய்வு மலரினை வெளியிட்டார்.

அதனைத் தொடர்ந்து புது டெல்லி ஜவர்ஹர் லால்நேரு பல்கலைக்க ழக துணை வேந்தர் சாந் திஸ்ரீ துலிப்புடி பண்டிட் வள்ளலாரைத் தான் அறிந்த தனது இளமைக் கால நிகழ்வினைக் கூறிக் கருத்தரங்கத் தொடக்க வுரை நிகழ்த்தினார்.

அதன் பின்னர் கருத்த ரங்க ஆய்வு மலரினை தின மணி ஆசிரியர் கே.வைத் தியநாதன். பெற்றுக் கொண்டு பேசிய போது அவர் தமது உரையில் வள் ளலார் மேல் கொண்ட அன்பினால் பார்வதிபுரம் வாழ் மக்கள் 80 காணி நிலம் அவர்களாகவே மன முவந்து கொடுத்தனர்.

அந்த இடத்தில் தான் வடலூர் சத்திய ஞான சபையை வள்ளலார் நிறு வினார் என்றும் வள்ளலா ருக்கான நூற்றாண்டு நிகழ் வினை மதுரை தியாகராசர் கல்லூரிதான் தமிழகத்தி லேயே மிகப்பெரிய விழா வாக முதன் முதலில் எடுத் திருக்கிறதுஎன்றுகூறினார். இந்த நிகழ்ச்சியில் சாகித் திய அகாதமியின் தமிழ் ஆலோசனைக் குழு ஒருங் கிணைப்பாளர் பேராசிரி யர் இரா.தாமோதரன் இளைய சமுதாயம் வள்ள லாரை அறிந்து அவர் வழி யில் நடக்க வேண்டும் என்று கூறி நோக்கவுரை நிகழ்த்தினார்.

விழாவில் தியாகராசர் கல்லூரியின் மேனாள் பேராசிரியர், முனைவர் கு.ஞானசம்பந்தன் புலால் உண்ணாமையின் நன்மை யினை எடுத்துரைத்து வாழ்த்துரை வழங்கினார். அதனைத் தொடர்ந்து சென்னை சாகித்திய அகா தமி அலுவலகத்தின் பொறுப்பு அலுவலர் தே.ச.சந்திரசேகர ராஜூ வரவேற்புரை ஆற்றினார்.

இந்நிகழ்ச்சியின் போது கல்லூரி முதல்வர் முனை வர் து.பாண்டியராஜா. கல் லூரித் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் இராம.மலர்விழி மங்கை யர்க்கரசி முனைவர் மா. பரமசிவன் மற்றும் தமிழ்த் துறைப் பேராசிரியர்கள் கல்லூரியின் பிற துறைத் தலைவர்கள், பேராசிரியர் கள், முனைவர் பட்ட ஆய் வாளர்கள் மற்றும் இளங் கலை முதுகலை மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.